**கவனிக்க.**-2016.12.23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**2000 - 2016 දෙසැම්බර් මස 30 වැනි සිකුරාදා - 2016.12.30**

*2000 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 1558 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 1562 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1563 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1564 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- இந்த வர்த்தமானியின் பகுதி VI இல், 2017 ஆம் ஆண்டுக்கான பதுளை மாவட்ட நீதாசன வலயத்திற்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்கள மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, சனவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, சனவரி மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2016 இன் இல. 1483*

*எம்ஓடி/டிஈஎப்/03/02/ஆர்ஈரீ/239.*

## இலங்கைக் கடற்படை

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர கடற்படை பிரிவில் இருந்து நிரந்தர உப சேவைக்கு மாற்றுதல்*

*கீழ்க் காணப்படும் பெயர் உள்ள சிரேஷ்ட அலுவலர் 2016, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இலங்கைக் கடற்படை நிரந்தரப் பிரிவில் இருந்து நிரந்தர உப சேவைக்கு மாற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-*

*கொமதோரு (நீதி) அமரபதி முதியன்செலாகே ஆனந்த வைத்தியரத்ன வீரசிங்க, யூஎஸ்பீ, இகப - என்ஆர்ஏ 0833*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு அமைச்சு.*

*பாதுகாப்பு அமைச்சு,*
*கொழும்பு,*
*2016, நவெம்பர் 23.*

*12-1171/1*

---

*2016 இன் இல. 1484*

*எம்ஓடி/டிஈஎப்/03/02/ஆர்ஈரீ/239.*

## இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்*

*கீழ்க் காணப்படும் பெயர் உள்ள சிரேஷ்ட அதிகாரி 2016, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இலங்கைக் கடற்படை நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-*

*கொமதோரு (நீதி) அமரபதி முதியன்செலாகே ஆனந்த வைத்தியரத்ன வீரசிங்க, யூஎஸ்பீ, இகப - என்ஆர்ஏ 0833*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு அமைச்சு.*

*பாதுகாப்பு அமைச்சு,*
*கொழும்பு,*
*2016, நவெம்பர் 23.*

*12-1171/2*

---

*2016 இன் இல. 1485*

*எம்ஓடி/டிஈஎப்/10/03/ஆர்ஈரீ/47.*

## இலங்கை வான்படை

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல் மற்றும் நிரந்தர உப சேவைக்கு மாற்றுதல்*

*கீழ்க்காணும் பெயருடைய உத்தியோகத்தர், 2013, யூன் மாதம் 18 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையிலிருந்து இளைப் பாறுதல் மற்றும் 2013, யூன் 19 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படை நிரந்தர உபசேவைக்கு மாற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-*

*எயார் வயிஸ் மார்ஷல் பாலசூரிய லேக்கம்லாகே வசந்த பாலசூரிய (01320) - தொழில்நுட்ப/பொறி கிளை*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு.*

*பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு,*
*2013, மே 07.*

*12-1206*

---

*2016 இன் இல. 1486*

*எம்ஓடி/டிஈஎப்/10/03/பீஆர்ஓ/05.*

## இலங்கை வான்படை

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வுகள்*

*கீழ்க்காணப்படும் பெயருடைய அதிகாரி அவருடைய பெயருக்கு முன்னால் குறிப்பிடப்படும் திகதியிலிருந்து நிரந்தர எயார் வைஷ் மார்ஷல் நிலைக்கு பதவி உயர்த்தப்படுகிறார் :-*

*தற்காலிக எயார் வயிஸ் மார்ஷல் தாபறே லியனகே சுமங்கல டயஸ் (01449) பொது சேவை. பைலட் - 2015.08.15*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*பி. எம். யூ. டீ. பஸ்நாயக்க,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு அமைச்சு.*

*பாதுகாப்பு அமைச்சு,*
*கொழும்பு,*
*2015, ஓகத்து 25.*

*12-1168*

*2016 இன் இல. 1487*

எம்ஓடி/டிஈஎப்/10/03/ஆர்ஈரீ/122.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

கீழ்க்காணப்படும் பெயருடைய உத்தியோகத்தரின், 2015, ஓகத்து மாதம் 04 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

எயார் கொமதோர் தித்தகல்ல கமகே ஜயசிறி அமரசேன (01481) - மின்சார பொறியியல் கிளை

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. எம். யூ. டீ. பஸ்நாயக்க,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2015, மே 18.

12-1205

---

*2016 இன் இல. 1488*

எம்ஓடி/டிஈஎப்/10/03/ஆர்ஈரீ/42.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

கீழ்க்காணும் பெயருடைய உத்தியோகத்தர் 2013, மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

குரூப் கப்ரன் உபுல சேனக்க லியனசூரிய (01705) - தொழில்நுட்ப/பொறி கிளை

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, சனவரி13.

12-1207

---

*2016 இன் இல. 1489*

எம்ஓடி/டிஈஎப்/10/03/ஆர்ஈரீ/118.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

கீழ்க்காணும் பெயருடைய உத்தியோகத்தர் 2015, செப்தெம்பர் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

குரூப் கப்ரன் பட்டபெந்திகே லங்காதீர ஜயரோஹன் கொடிப்பிலி (01439) - நிரு/ரெஜி கிளை

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. எம். யூ. டீ. பஸ்நாயக்க,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2015, யூன் 01.

12-1199

---

*2016 இன் இல. 1490*

எம்ஓடி/டிஈஎப்/10/03/ஆர்ஈரீ/41.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, திசெம்பர் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

விங் கொமாண்டர் பக்கீர் மொஹைடீன் செயித் அப்துல் ரஹீம் ஜஃபர் சாதீக் (01712) - நிருவாக ரெஜிமன்ட் கிளை

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2012, ஒற்றோபர் 25.

12-1201

*2016 இன் இல. 1491*

எம்ஓடி/டிஈஎப்/10/03/ஆர்ஈரீ/43.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

கீழ்க்காணும் பெயருடைய உத்தியோகத்தர், 2013, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

விங் கொமாண்டர் பெஸ்ரியன் ஆரச்சிகே ரவீந்த ஜயசிங்ஹ (01869) - நிரு/ரெஜி கிளை

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, பெப்புருவரி 07.

*12-1209*

---

*2016 இன் இல. 1492*

எம்ஓடி/டிஈஎப்/10/03/ஆர்ஈரீ/61.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2013, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

விங் கொமாண்டர் பரந்தர சரத மாவிட்டகம (01825) - தொ. பொ. கிளை

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, செத்தெம்பர் 06.

*12-1208*

---

*2016 இன் இல. 1493*

எம்ஓடி/டிஈஎப்/10/03/ஆர்ஈரீ/76.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2014, மே மாதம் 03 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

விங் கொமாண்டர் இத்திரிசிங்க முதியன்சேலாகே யசனாத் அனுருத்த பண்டார (01850) - பொது கடமைகள் பைலட் கிளை

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2014, பெப்புருவரி 28.

*12-1202*

---

*2016 இன் இல. 1494*

எம்ஓடி/டிஈஎப்/10/03/ஆர்ஈரீ/95.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2014, ஓகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

விங் கொமாண்டர் பாகொட முதியன்சேலாகே சுதர்ம மஹிந்த பாகொட (01774) - நிருவாக ரெஜிமன்ட் கிளை

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2014, யூன் 10.

*12-1170*

*2016 இன் இல. 1495*

எம்ஓடி/டிஈஎப்/10/03/ஆர்ஈரீ/117.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

கீழ்க்காணும் பெயருடைய தொண்டர் உத்தியோகத்தரின் 2015, யூன் மாதம் 20 ஆந் திகதியிலிருந்து இலங்கை தொண்டர் வான்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

விங் கொமாண்டர் கிரிஹெனனதிகே ரோஹன ஜயலத் (வீ/0252) - மருத்துவக் கிளை

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. எம். யூ. டீ. பஸ்நாயக்க,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2015, மே 07.

12-1093

---

*2016 இன் இல. 1496*

எம்ஓடி/டிஈஎப்/10/03/ஆர்ஈரீ/60.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய மகளிர் உத்தியோகத்தர் 2013, திசெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

ஸ்கொட்ரன் லீடர் கங்கானம் கமகே ஜயந்தி சந்திமா கமகே (மஉ/01054) - தொ. பொ. கிளை

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, செத்தெம்பர் 06.

12-1092

*2016 இன் இல. 1497*

எம்ஓடி/டிஈஎப்/10/03/ஆர்ஈரீ/64.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய மகளிர் உத்தியோகத்தர் 2013, திசெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

ஸ்கொட்ரன் லீடர் விதான ஆரச்சிகே ரஷிகா லஷந்தி ஜயசுந்தர (மஉ/01056) - தொ.பொ.கிளை

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, செத்தெம்பர் 06.

12-1203

---

*2016 இன் இல. 1498*

எம்ஓடி/டிஈஎப்/10/03/ஆர்ஈரீ/116.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
இளைப்பாறுதல்

கீழ்க்காணும் பெயருடைய உத்தியோகத்தர் 2015, ஓகத்து மாதம் 06 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

ஸ்கொட்ரன் லீடர் ஜயேஷி அநுராதா குணரத்ன (ஓடபிள்யூ/01075) - நிருவாகக் கிளை

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. எம். யூ. டீ. பஸ்நாயக்க,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2015, மாச்சு 30.

12-1200

*2016 இன் இல. 1499*

எம்ஓடி/டிஈஎப்/10/03/ஆர்ஈரீ/123.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

கீழ்க்காணும் பெயருடைய உத்தியோகத்தர் 2015, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

பிளைட் லெப்டினன்ட் ரத்நாயக்க முதியன்சேலாகே சஞ்சீவ ரத்நாயக்க (02725) - நிருவாக ரெஜிமன்ட் கிளை

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. எம். யூ. டீ. பஸ்நாயக்க,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2015, யூன் 01.

12-1204

*2016 இன் இல. 1500*

எம்ஓடி/டிஈஎப்/10/03/ஆர்ஈரீ/124.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

கீழ்க்காணும் பெயருடைய உத்தியோகத்தர் 2015, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

பிளைட் லெப்டினன்ட் இலும்பேதென்னே கெதர ரவீந்திர (02727) - நிரு/ரெஜி கிளை

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. எம். யூ. டீ. பஸ்நாயக்க,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2015, யூன் 17.

12-1169

## மற்றைய நியமனங்களும் பிறவும்

*2016 இன் இல. 1501*

**நீதி அமைச்சு**

1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45(3) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஆகிய நான், பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சட்டத்தரணிகளை சம்பந்தப்பட்ட நீதி நிருவாகப் பிரிவுகளுக்கான சமாதான நீதவான்களாகவும் உத்தியோகப்பற்றற்ற நீதிவான்களாகவும் நியமிக்கின்றேன்.

| தொடர் இல. | பெயர் | முகவரி | நீதி நிருவாக வலயம் |
|---|---|---|---|
| 1. | சட்டத்தரணி சமிந்த விஸ்வநாத் ஜயசிங்க அரம்பவெல | இல. 261A, வக்வெல்ல வீதி, காலி | காலி |
| 2. | சட்டத்தரணி கார்தியே வெலிகமகே தர்ஷன நிலான் பிரசந்த த சில்வா | இல.299, 'சில்வா நிவச', கதுலுவ, அகங்கம | காலி |
| 3. | சட்டத்தரணி பீற்றர் அன்ரூ நெவில் மிரெண்டா | இல.123/1, கெசெல்வதுகொட, யக்கல | கம்பஹா |
| 4. | சட்டத்தரணி (திருமதி) ஈரியகஹஎலே ஜயமங்கள கெதர சுவர்ணாகுமாரி தமயந்தி குணதிலக | இல.296/A/3, இகலயாகொட, இம்புல்கொட | கம்பஹா |
| 5. | சட்டத்தரணி ரதுகே ஞானரத்ன | இல.57/1, கெடுமான, ஹேனெகம, (மே.மா) | கம்பஹா |
| 6. | சட்டத்தரணி (திருமதி) ஜனித்திரி ஜானகீ வடுகே | இல.66/20, சுகத மாவத்தை, வலவ்வத்த,வேகட, பாணந்துறை | பாணந்துறை |

| தொடர் இல. | பெயர் | முகவரி | நீதி நிருவாக வலயம் |
|---|---|---|---|
| 7. | சட்டத்தரணி (திருமதி) போலபே ஹேரத் முதியன்சேலாகே சமிதா குமாரி செனரத் பண்டார | இல.28, வெத மாவத்தை, கொறகான, கெசெல்வத்த , பாணந்துறை, | பாணந்துறை |
| 8. | சட்டத்தரணி அகம்பொடி சுசந்த மென்டிஸ் குணசேகர | இல.280/82, 'கார்டன் சிட்டி, 3ஆம் ஒழுங்கை, காலிவீதி, லக்ஷபதிய, மொரட்டுவ | கொழும்பு |
| 9. | சட்டத்தரணி (திருமதி) ரன்னுலு சம்பாத சொய்ஸா | இல48, ஹேன வீதி, கல்கிசை | கல்கிசை |
| 10. | சட்டத்தரணி வேவல்வெல ஹேவகே சுனில் ஞானதிலக | 'சுகத சிறி', ஹவ்பே காலி, | காலி |
| 11. | சட்டத்தரணி வித்தானகே சனத் தம்மிக குணதிலக | 'இந்துவர', கொனகலபுர, பெந்தோட்டை | பலப்பிட்டிய |
| 12. | சட்டத்தரணி கொடிதுவக்கு கங்கானம்கே சஞ்சய கொடிதுவக்கு | இல.738, காலி வீதி, ரன்தொம்பே, அம்பலான்கொட | பலப்பிட்டிய |
| 13. | சட்டத்தரணி புலத்வெலகே டியுடர் பெர்னாந்து | இல.169B, தளுபொத, நீர்கொழும்பு | நீர்கொழும்பு |

விஜயதாச ராஜபக்ஷ,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு.
கொழும்பு 12.
2016, திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி

12-1097

---

## அரசாங்க அறிவித்தல்கள்

இணைப்பு : ED/05/69/01/01/101

### 1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடைபெறும் பாடசாலைகள் மற்றும் பயிலுநர் கல்லூரி (குறை நிரப்பு ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் விடுவிக்கப்படும் கட்டளை

நீர்/உதமிட்ட றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் ஆகிய நான், 1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடைபெறும் பாடசாலை மற்றும் பயிலுநர் கல்லூரி (குறைநிரப்பு ஒழுங்கு விதிகள்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய செயற்பட்டு 1963.04.06 ஆந் திகதிய 13,594 ஆம் இலக்க, இலங்கை அரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப் பட்ட 2492 ஆம் இலக்க ஒப்படைப்புக் கட்டளையின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள 32 பேர்ச்சுகள் காணிக்கு மாத்திரம் உரியதாகும் வகையில் 2016.12.09 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இத்தால் இரத்துச் செய்கி றேன்.

அகில விராஜ் காரியவசம்,
கல்வி அமைச்சர்.

"இசுருபாய",
பலவத்த,
பத்தரமுல்லை,
2016, திசெம்பர் 09.

12-1214

இணைப்பு : ED/05/69/01/01/123

### 1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடைபெறும் பாடசாலைகள் மற்றும் பயிலுநர் கல்லூரிகளில் (குறை நிரப்பு ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் கட்டளை

மேல்/களு/வத்தளை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் ஆகிய நான், 1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கம் கொண்ட உதவி நன்கொடைபெறும் பாடசாலை மற்றும் பயிலுநர் கல்லூரி (குறைநிரப்பு ஒழுங்கு விதிகள்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய செயற்பட்டு 1962, ஒற்றோபர் 01 ஆந் திகதிய 13,319 ஆம் இலக்க, இலங்கை அரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலக்கம் 1948 கொண்ட ஒப்படைப்புக் கட்டளையின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளவாறு 1 றூட் 20 பேர்ச்சுகள் காணிக்கு மாத்திரம் உரியதாகும் வகையில் 2016, திசெம்பர் 09 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இத்தால் இரத்துச் செய்கிறேன்.

அகில விராஜ் காரியவசம்,
கல்வி அமைச்சர்.

"இசுருபாய",
பலவத்த,
பத்தரமுல்லை,
2016, திசெம்பர் 09.

12-1215

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### மக்கள் வங்கி

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 D பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 2016.11.02 ஆந் திகதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கம்பஹா பிரசித்த நொத்தாரிசு டீ. எஸ். லோரன்ஸ் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.10.13 ஆந் திகதி கொண்ட 6532 ஆம் இலக்கம் கொண்ட முறியின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில் சிந்துஜா ஸ்ரீ கணேசாரத்னம் என்பவர் தவணை தவறியுள்ளமையாலும், குறப்பிட்ட முறியின் கீழ் தற்போது ஐம்பத்தொரு இலட்சத்து முப்பத் தொன்பதாயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஏழு ரூபா மூன்று சதம் (ரூ. 51,39,297.03) பணத்தொகை தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக வரவேண்டியுள்ளது. மேலும் ஐம்பத்தொரு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஏழு ரூபா மூன்று சதம் (ரூ. 51,39,297.03) பணத்தொகைக்காக 2016.07.27 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதி வரை 14% வருடாந்த வட்டியுடன் ஐம்பத்தொரு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஏழு ரூபா மூன்று சதம் (ரூ. 51,39,297.03) மேலும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29L பிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய பணங்களும், கட்டணங்களும் மேலும் ஏதாவது கொடுப்பனவுகள் பெறப்பட்டு இருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட ஐம்பத்தொரு இலட்சத்து முப்பத்தொன்பதா யிரத்து இருநூற்று தொண்ணூற்று ஏழு ரூபா மூன்று சதம் (ரூ. 51,39,297.03) பணத்தொகையை அறவிடுவதற்கு கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர் சொக்மன் மற்றும் சமரவிக்ரம என்பவர்களினால் குறிப்பிட்ட இலக்கம் 6532 கொண்ட முறியின் கீழ் குறிப்பிட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

#### ஈடுவைக்கப்பட்ட ஆதனம் பற்றிய விபரம்

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோறளை தாஸிய பத்துவ கட்டுநாயக்கநகர சபை எல்லைக்குள்ளான கட்டான பிரதேச செயலகப் பிரிவில் சீதுவை இலக்கம் 148A அமந்தொலுவை கிராம அலுவலர் பிரிவில் அமந்தொலுவை கிராமத்தில் அமைந்துள்ள அம்பகஹவத்தை எனும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. கே. சமரசிங்க அவர்களால் 2008.03.13 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்டஇலக்கம் 161 எனும் வரைபடத்தில் காணப்படும் 1 எனும் காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கு: வேத்தேவ வீதியும்; கிழக்கு : 2 ஆம் இலக்கக் காணித்துண்டும் ; தெற்கு : எக்கமுத்து மாவத்தையும் ; மேற்கு : வேத்தேவ வீதியும் எல்லைகளாக அமைந்த இருபது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே.) விசாலமான காணியும் அதற்குட்பட்ட மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் சகலதுமாகும். இந்தக் காணி நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் இலக்கம் H 50/42 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோறளை தாஸிய பத்துவ கட்டுநாயக்கநகர சபை எல்லைக்குள்ளான கட்டான பிரதேச செயலகப் பிரிவில் சீதுவை இலக்கம் 148A அமந்தொலுவை கிராம அலுவலர் பிரிவில் அமந்தொலுவை கிராமத்தில் அமைந்துள்ள அம்பகஹவத்தை எனும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. கே. சமரசிங்க அவர்களால் 2008.03.13 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்டஇலக்கம் 161 எனும் வரைபடத்தில் காணப்படும் 2 எனும் காணித்துண்டின்

எல்லைகளாக - வடக்கு: வீதியும் ; கிழக்கு : 3 ஆம் இலக்கக் காணித்துண்டும் ; தெற்கு : எக்கமுத்து மாவத்தையும் ; மேற்கு : 1 ஆம் இலக்கக் காணித்துண்டும் எல்லைகளாக அமைந்த இருபது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே.) விசாலமான காணியும் அதற்குட்பட்ட மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் சகலதுமாகும். இந்தக் காணி நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் இலக்கம் H 50/43 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோறளை தாஸிய பத்துவ கட்டுநாயக்கநகர சபை எல்லைக்குள்ளான கட்டான பிரதேச செயலகப் பிரிவில் சீதுவை இலக்கம் 148A அமந்தொலுவை கிராம அலுவலர் பிரிவில் அமந்தொலுவை கிராமத்தில் அமைந்துள்ள அம்பகஹவத்தை எனும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. கே. சமரசிங்க அவர்களால் 2008.03.13 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்டஇலக்கம் 161 எனும் வரைபடத்தில் காணப்படும் 3 எனும் காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கு: வீதியும் ; கிழக்கு : 4 ஆம் இலக்கக் காணித்துண்டும் ; தெற்கு : எக்கமுத்து மாவத்தையும் ; மேற்கு : 2 ஆம் இலக்கக் காணித்துண்டும் எல்லைகளாக அமைந்த இருபது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே.) விசாலமான காணியும் அதற்குட்பட்ட மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் சகலதுமாகும். இந்தக் காணி நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் இலக்கம் H 50/44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோறளை தாஸிய பத்துவ கட்டுநாயக்கநகர சபை எல்லைக்குள்ளான கட்டான பிரதேச செயலகப் பிரிவில் சீதுவை இலக்கம் 148A அமந்தொலுவை கிராம அலுவலர் பிரிவில் அமந்தொலுவை கிராமத்தில் அமைந்துள்ள அம்பகஹவத்தை எனும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. கே. சமரசிங்க அவர்களால் 2008.03.13 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 161 எனும் வரைபடத்தில் காணப்படும் 4 எனும் காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கு: வீதியும் ; கிழக்கு : என். அஜித் சில்வாவின் காணியும் ; தெற்கு : எக்கமுத்து மாவத்தையும் ; மேற்கு : 3 ஆம் இலக்கக் காணித்துண்டும் எல்லைகளாக அமைந்த இருபத்து நான்கு தசம் ஏழு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 24.75பே.) விசாலமான காணியும் அதற்குட்பட்ட மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் சகலதுமாகும். இந்தக் காணி நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் இலக்கம் H 50/45 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் குறிப்பிட்ட வரைபடத்தில் காணப்படும் பாதை ஒதுக்கீடும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

பிரதேச முகாமையாளர்,
கம்பஹா.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 131, கண்டி வீதி,
பெலும்மஹர,
முதுன்கொடை.

12-1212

## நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ

*1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2016.11.28 ஆந் திகதி கீழ்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

ரெலி-பிக்ஸ் ரெக்னொலொஜிஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

“பிணைப்படுத்தியவர் அடமானதாரராகிய ரெலி-பிக்ஸ் ரெக்னொலொஜிஸ் (பிறைவேற்) லிமிட்டெட் பிரசித்த நொத்தாரிசு ரொமானி தலவத்தவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, சித்திரை 05 ஆந் திகதிய 49 ஆம் இலக்கம் கொண்ட ஈட்டுமுறி மூலம் இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள், உரிமைகளை ஈடாக மற்றும் அடமானமாக இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு-2 ஐச் சேர்ந்த நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ சார்பில் ரெலி-பிக்ஸ் ரெக்னொலொஜிஸ் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் பெறப்பட்ட நிதி வசதிகளின் உரிய மீள் கொடுப்பனவுக்கு பிணையாக வைத்துள்ளதாலும், மற்றும் குறிப்பிட்ட ரெலி-பிக்ஸ் ரெக்னொலொஜிஸ் (பிறைவேற்) லிமிட்டெட் குறித்த முறி மூலம் உத்தரவாதமளித்த வசதிகளின் மீதான செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ளமையினாலும்,

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் அளிக்கப்பெற்ற தத்துவங்களின் கீழ் இருபத்தெட்டு இலட்சத்து தொண்ணூறாயிரத்து தொளாயிரத்து எண்பத்தொன்பது ரூபா நான்கு சதம் (ரூ. 28,90,989.04) தொகையையும், 2016.10.26 ஆந் திகதியன்று தவணைக்கடன் வசதியின் மூலதன நிலுவைத் தொகையாகவுள்ள இருபத்தாறு இலட்சத்து பன்னிரண்டாயிரத்து நாநூற்று இருபத்தொரு ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூ. 26,12,421.89) தொகை மீது இணங்கப்பட்டபடி 2016.10.27 ஆந் திகதியிலிருந்து கூடுதலான வட்டியையும் உதவியாளர் செலவு, நியதிச்சட்ட தீர்வைகள், விளம்பரச் செலவுகளையும் சேர்த்து மற்றும் அதன்பின் ஏற்பட்ட ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள், உரிமைகளை கொழும்பு திரிவாங்க மற்றும் சேனாநாயக்க ஏலதாரர்கள் அமைப்பைச் சேர்ந்த திரு. திரிவாங்க சீ. சேனாநாயக்கவினால் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட வேண்டுமென்று இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.”.

### அட்டவணை

*மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைக்குள்ளான நுவர தொடன்வல கிராமத்தில் வரிமதிப்பீட்டிலக்கம் 11/ 2E உள்ள கட்டடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அதில் நிற்கும் எல்லாம் சேர்த்து. கல்கந்த எஸ்டேட் என அழைக்கப்படும் காணிக்கு அனுமதி பெற்ற நிலஅளவையாளர் எஸ்.எம். அபேரத்ன தயாரித்த 1996.10.10 ஆந் திகதிய 1369 ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் A என குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் குறித்த லொட் A ஆனது வடக்கு மற்றும் வடகிழக்கு : 1447 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள லொட்கள் 12மற்றும் 13 (அதே நிலத்தில் மீதமுள்ள பகுதி) மற்றும் ஒழுங்கை ; கிழக்கு : நில அளவையாளர் ரி. ரி. டேவிட் தயாரித்த 1939.08.28 ஆந் திகதிய 1447 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள லொட் 1A மற்றும் 2A ; தெற்கு மற்றும் தென்கிழக்கு : 1369 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள லொட்கள் B, C மற்றும் D (10 அடி அகலம்) மற்றும் தொடன்வல ஒழுங்கை மற்றும் ; மேற்கு : ஒழுங்கை எல்லைகளையும் குறிப்பிட்ட 1369 ஆம் வரைபடத்தின் படி ஒரு றூட் மற்றும் இருபது பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 20பே.). விஸ்தீரணத்தையும் கொண்டது. மற்றும் கண்டி காணிப் பதிவகத்தில், வொலியும்/போலியோ A442/140 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*அதனுடன் மேலாக மற்றும் அதன் வழியாக வழிப்பாதையை உபயோகிப்பதற்கான உரிமை.*

*மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைக்குள்ளான நுவர தொடன்வல கிராமத்தில் கல்கந்த எஸ்டேட் என அழைக்கப்படும் காணிக்கு அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். அபேரத்ன தயாரித்த 1996.10.10 ஆந் திகதிய 1369 ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் D என குறிப்பிடப்பட்டுள்ள, மற்றும் குறித்த லொட் D ஆனது வடக்கு : லொட் A ; வடகிழக்கு மற்றும் கிழக்கு : நில அளவையாளர் ஜே.டி. டேவிட் தயாரித்த 1939.08.28 ஆந் திகதிய 1447 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள மீதமுள்ள லொட்களின் பகுதி A மற்றும் 2A மற்றும் பாறை; தெற்கு : அனிவத்தயிலிருந்து அஸ்கிரிய நோக்கிய கல்கந்த வீதி மற்றும் ; மேற்கு : லொட் C எல்லைகளையும் குறிப்பிட்ட 1369 ஆம் வரைபடத்தின் ஐந்து தசம் இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 5.2பே.). விஸ்தீரணத்தையும் கொண்டது. மற்றும் கண்டி காணிப்பதிவகத்தில், வொலியும்/போலியோ A442/141 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-02.

11-1151

---

### பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. - உலக வர்த்தக நிலைய கிளை

*வாடிக்கையாளரின் பெயர் : ஜனதா எஸ்டேட் அபிவிருத்திச் சபை 33/75, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.*

*2016.11.30 ஆந் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபன பணிப்பாளர் சபைக்கூட்டததில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது.*

*உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யு. ஜயசூரிய அவர்களால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டிய கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டி. வீ. எகொடகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2004, செத்தெம்பர் 2 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 272 இனது மூலம் அத்துடன் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். ஐ. சமரசிங்ஹ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2001, செத்தெம்பர் 7 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 1093 மற்றும் 1999, யூன் 24 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 737 ஆகிய இரண்டினது மூலமும் அசையா ஆதனம் பிணையாக வைக்கப்பட்டுள்ளது.*

*2012, பெப்புருவரி 29 ஆந் திகதிய தீர்மானம் மற்றும் 2012, பெப்புருவரி 29 ஆந் திகதிய மீளப் பெறப்பட இருந்த சொல்லப்பட்ட தீர்மானத்தினால் உத்தரவுபெற்ற ஏலதாரர் பீ. கே. ஈ. சேனாபதி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கின்றது.*

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதித்த கொடிக்கார,
முகாமையாளர் - அறவீடுகள்

12-1242

---

### நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ

*1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

*1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2016.11.28 ஆந் திகதி கீழ்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

போதஹன்டி லொயிட் ஜினரஞ்சன் டி சில்வா

*''பிணைப்படுத்தியவர் மற்றும் அடமானதாரராகிய போதஹன்டி லொயிட் ஜினரஞ்சன் டி சில்வா பிரசித்த*

நொத்தாரிசு எம். டி. பி. எஸ். கருணாநாயகவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011, ஆவணி 26 ஆந் திகதிய 4200 ஆம் இலக்கம் கொண்ட ஈட்டுமுறி மூலம் இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங்கள், உரிமைகளை ஈடாக மற்றும் அடமானமாக இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு-2 ஐச் சேர்ந்த நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ சார்பில் போதஹண்டி லொயிட் ஜினரஞ்சன் டி சில்வாவினால் பெறப்பட்ட நிதி வசதிகளின் உரிய மீள் கொடுப்பனவுக்கு பிணையாக வைத்துள்ளதாலும் மற்றும் குறிப்பிட்ட போதஹன்டி லொயிட் ஜினரஞ்சன் டி சில்வா குறித்த முறி மூலம் உத்தரவாதமளித்த வசதிகளின் மீதான செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ளமை யினாலும்,

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் அளிக்கப்பெற்ற தத்துவங்களின் கீழ் ஐம்பத்தொன்பது இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து அறுநூற்றுதொண்ணூற்று ஒன்பது ரூபா நாற்பத்தொரு சதம் (ரூ. 59,78,699.41) தொகையையும், 2016.09.07 ஆந் திகதியன்றுள்ள தவணைக் கடன் மீதுள்ள மூலதன நிலுவைத் தொகையாகவுள்ள ஐம்பத்துமூன்றுஇலட்சத்து இரண்டாயிரத்து நாநூற்று எண்பத்தொன்பது ரூபா அறுபத்திரண்டு சதம் (ரூ. 53,02,489.62) தொகை மீது 2016.09.08 ஆந் திகதியிலிருந்து கூடுதலான வட்டியையும் உதவியாளர் செலவு, நியதிச்சட்ட தீர்வைகள், விளம்பரச் செலவுகளையும் சேர்த்து மற்றும் அதன் பின் ஏற்பட்ட ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, இதனுடனுள்ள அட்டவணையில் மேலும் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் கட்டடங் கள், உரிமைகளை கொழும்பு திரிவாங்க மற்றும் சேனாநாயக்க ஏலதாரர்கள் அமைப்பைச் சேர்ந்த திரு. திரிவாங்க சீ. சேனாநாயக்கவினால் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட வேண்டு மென்று இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.".

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிற்றி கோறளை, பல்லே பற்று கொழும்பு மாநகர சபையின் எல்லைக்குள்ளான பொரளையில் உள்ள கலாநிதி என். எம். பெரேரா மாவத்தையில் (முன்பு கொட்டா வீதி) தற்போதைய வரிமதிப்பீட்டிலக்கம் 60A இல் அமைந்த மற்றும் அதில் நிற்கும் எல்லாம் சேர்த்துள்ள காணிக்கு அனுமதி பெற்ற நிலஅளவையாளர் எஸ். விக்கிரமசிங்க தயாரித்த 1985, மாசி 09 ஆந் திகதிய 1757ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் A2 என குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் குறித்த லொட் எஸ். விக்கிரமசிங்க தயாரித்த 2008, ஆவணி 19 ஆந் திகதிய 5080/9000 ஆம் இலக்க வரைபடத்தில் (வீதி விரிவாக்கத்தின் பின்) மீளளவை செய்யப்பட்டு அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் A2A என குறிப்பிடப்பட்டுள்ள, மற்றும் குறித்த லொட் A2A ஆனது - வடக்கு: கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை (கொட்டா வீதி) ; கிழக்கு : வரிமதிப்பீட்டிலக்கம் 62A வளாகம், கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை ; தெற்கு : வரிமதிப்பீட்டிலக்கம் 62/1 வளாகம், கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை மற்றும் ; மேற்கு : வரி மதிப்பீட்டிலக்கம் 60 வளாகம், கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை எல்லைகளையும் குறிப்பிட்ட 5080/9000 வரைபடத்தின் படி ஏழு தசம் ஆறு ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 7.66பே.). விஸ்தீரணத்தையும் கொண்டது.

குறிப்பிட்ட 5080/9000 வரைபடத்திலுள்ள குறித்த லொட் A2A ஆனது நிலஅளவையாளர் எஸ். விக்கிரமசிங்க தயாரித்த 1985, மாசி 09ஆந் திகதிய 1757 ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் A2 இலிருந்து மீளளவை செய்யப்பட்டது. (வீதி விரிவாக்கத்தின் பின்) அது பின்வருமாறு விபரிக்கப்படுகிறது:-

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிற்றி கோறளை, பல்லே பற்று கொழும்பு மாநகர சபையின் எல்லைக்குள்ளான பொரளையில் உள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 60 (பகுதி) கொட்டா வீதி (வைத்தியர் என்.எம். பெரேரா மாவத்தை) மற்றும் தற்போதைய வைத்தியர் என்.எம். பெரேரா மாவத்தை வரிமதிப்பீட்டிலக்கம் 60A இல் அமைந்த மற்றும் அதில் நிற்கும் எல்லாம் சேர்த்துள்ள காணிக்கு அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். விக்கிரமசிங்க தயாரித்த 1985, மாசி 09 ஆந் திகதிய 1757ஆம் இலக்க வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் A2 என குறிப்பிடப்பட்டுள்ள, மற்றும் குறித்த லொட் A2 ஆனது - வடக்கு: கொட்டா வீதி ; கிழக்கு : வரிமதிப்பீட்டிலக்கம் 62, கொட்டா வீதி ; தெற்கு : வரிமதிப்பீட்டிலக்கம் 60/1 கொட்டா வீதி மற்றும் ; மேற்கு : குறித்த 1757 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள லொட் A1 எல்லைகளையும் குறிப்பிட்ட 1757 ஆம் இலக்க வரைபடத் தின் படி ஒன்பது தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 9.25பே.). விஸ்தீரணத்தையும் கொண்டது மற்றும் கொழும்பு காணிப் பதிவகத்தில் A 729/ 164 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-02.

11-1150

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.